சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள் –04.10.2024

ம.சா.1– சுகுமார் த/பெ –மகாலிங்கம்

**<u>சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

திருமணம் முடிந்து எங்களது இல்லற வாழ்க்கையை எனது வீட்டில்தான் தொடங்கினோம் என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்பு நான் LEBERA MEDIA SERVICES என்ற நிறுவனத்தில் பணிபுரிந்தேனா என்றால் இல்லை L&T நிறுவனத்தில் பணியாற்றினேன். திருமணத்திற்கு நான் தென் கொரியாவில் பணியாற்றினேன் என்றால் சரிதான், ஒரு Project க்காக 3 மாதம் அங்கு பணி செய்தேன். திருமணத்தின் போது நான் பெங்களூரில் L & T கம்பெனியில் பணியாற்றினேன். தற்சமயம் நோக்கியா கம்பெனியில் பணி செய்து வருகிறேன். L & T ஐ விட நோக்கியாவில் மாதவருமானன் அதிகம் என்றால் சரிதான். எனது குழந்தைகள் இருவருக்கும் அவர்களது பிறந்த நாளில் முறையே 10.01.2020 ல் தலா 1 தங்க செயின் பரிசாக கொடுத்தேன் என்றால் சரிதான். எனது திருமணத்திற்கு எதிர்மனுதாரர் சீர்வரிசை பொருள் கொடுத்தாரா என்றால் இல்லை, திருமணம் முடிந்து பிரச்சனை ஏற்பட்ட பின் மீண்டும் சேர்ந்து வாழ்ந்த போது கொடுத்தார்கள். திருமணத்தின் போது எதிர்மனுதாரர் சீர்வரிசை பொருள் கூடுதலாக கொடுக்கவில்லை என்று சர்ச்சை ஏற்பட்டதால் தான் பிரச்சனை ஆரம்பித்தது என்றால் சரியல்ல. திருமணத்தின் போது எதிர்மனுதாரர் 30 பவுன் சீர்வரிசையாக கொண்டு வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சென்னை ஜாபர்கான் பேட்டை வீட்டில் எனது தாயார் ஒருவாரம் இருந்தார் என்றால் சரிதான்.

அவர் எங்கள் வீட்டில் இருந்த போது தான் எதிர்மனுதாரருக்கும் அவருக்கும் சர்ச்சை ஏற்பட்டு இரவு 11.30 க்கு மேல் எதிர்மனுதாரர் வெளியே சென்றுவிட்டார் என்றால் சரிதான். எதிர்மனுதாரரின் கர்ப்ப காலத்தில் சில மாதங்களும், குழந்தை பிறந்த பிறகும் எதிர்மனுதாரர் தாயார் உடன் இருந்தார் என்றால் சரிதான், நானும் உடன் இருந்தேன். 2020, பிப்ரவரி வரை நானும், எதிர்மனுதாரும் சேர்ந்து வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். மனுவில் 2018 ல் இருந்து பிரிந்து வாழ்ந்து வருவதாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் 2015 ல் இருந்தே அவ்வப்போது நாங்கள் பிரிந்து வாழ்ந்து வருகிறோம். மனுவில் 2018 ல் இருந்து பிரிந்து வாழ்ந்து வருவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை கொலை மிரட்டலோ, மிரட்டலோ செய்யவில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரரூக்கும், எனது தாயாருக்கும் சச்சரவு என்றால் சரிதான். எதிர்மனுதாருக்கு விருதுநகர், விஜயலட்சுமி மருத்துவமனையில் பேறு காலம் நடைபெற்றது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் குழந்தை பிறந்த பின்பு மருத்துவமனைக்கு எனது தாயாரோ, அண்ணியோ வந்து பார்க்கவில்லை என்றால் எனது தாயார் வந்து பார்த்தார், எனது அண்ணன், அண்ணி மறுநாள் வந்து பார்த்தார்கள். மருத்துவமனையில் வைத்து எனது தாயார், அண்ணன், அண்ணி அனைவரும் வந்து பார்த்தார்கள், சச்சரவு ஏற்பட்டதா என்றால் இல்லை. நானும், எதிர்மனுதாரரும் அடுத்தடுத்த வீட்டில் சிறுவயது முதலே வாழ்ந்து வந்தோம் என்றால் சரிதான். எங்களது வளைகாப்பு விஷேசம் எங்களது ஊரில் மண்டபத்தில் நடைபெற்றது. நான் பிரிந்து வந்த முதல் எனது குழந்தைகளை பார்க்க நீதிமன்ற நடவடிக்கை

எடுக்கவில்லை என்று சொன்னால் அந்த நடைமுறை எனக்கு தெரியவில்லை. நான் பெங்களூரில் இருந்து சென்னைக்கு பணிமாற்றம் ஏற்பட்டு வந்த போது எதிர்மனுதாரர் எனக்கு ஹோண்டா சைன் இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார் என்றால் சரிதான். வாகனம் சம்மந்தமாக சர்ச்சை ஏற்பட்டதா என்றால் இல்லை. சென்னை ஜாபர்கான்பேட்டையில் சர்ச்சை ஏற்பட்டு எதிர்மனுதாரர் தனது இரண்டு குழந்தைகளை எடுத்துக்கொண்டு இரவு சுமார் 11.30 மணியளவில் வெளியே சென்றதற்கு நான் ஏதும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் நான் வீட்டில் இருந்தேன், வீட்டை விட்டு சென்றது எனக்கு தெரியாது. மறுநாள் காலையில் எனக்கு சம்பவம் தெரியும். எனது தாயாருக்கும் காலையில் தான் சம்பவம் பற்றி தெரியும். ஆனால் வீட்டில் பொருட்கள் சிதறி கிடந்தது. நான் இது குறித்து எனது மனைவி, குழந்தைகளை காணவில்லை என்று அருகில் உள்ள காவல்நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அவர்களை நானும், எனது தாயாரும் தொந்தரவு செய்து துன்புறுத்தி வீட்டை விட்டு வெளியேற்றி விட்டோம் என்றால் சரியல்ல. என்னை விட எனது மனைவிக்கு மாத சம்பளம் அதிகம் என்றால் சரிதான். அவர் சம்பளத்தை என்னிடம் கொடுத்ததில்லை என்றால் சரிதான். எதிர்மனுதாரர் என்னை கடுஞ்சொற்களால் பேசி உள்ளார். நான் தான் எதிர்மனுதாரர் மேல் விருப்பம் இல்லாமல் அவரது சம்பளத்தை எதிர்பார்த்து திருமணம் செய்துகொண்டேன் என்றும், பின்னர் என்னிடம் சம்பளத்தை தரவில்லை என்பதாலும் பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ விரும்புகிறார் என்று சொன்னால்

சரியல்ல. நான் தான் கூடுதல் வரதட்சணை மற்றும் சம்பளம் கேட்டு எதிர்மனுதாரர் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.